RESOURCE PACK

# வூந ளூலசயைமெ ஆழுழெடழபரநள
# தொடர்பான கற்கை தொகுப்பு

எழுத்து ஐயம்பத்தி குருகே

பதிப்பாக்கம் நலின்



stages theatre group

எச்சரிக்கை

இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள வாக்கியங்களையோ புகைப்படங்களையோ
தனியாகவோ
கூட்டாகவோ உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ மீள்பிரசுரம் செய்யக்கூடாது.
மீள்பிரசுரம் செய்யவேண்டிய தேவை
ஏற்படின் ஆசிரியரின் அனுமதி பெற்றேயாக வேண்டும்.

மீறுவோர் மீது புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழே வழக்குத் தொடரப்படும்.

**வள தொகுப்பு**
**சிரியன் மொனோலோக்ஸ்**

முதல் வெளியிடப்பட்டது (நிகழ்நிலை) 2020
© 2020 ஸ்டேஜஸ் தியேட்டர் குழு
ISBN – 978-624-5487-54-7

**லுசேனா**

**சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல்கள்**

**ஜோர்தானில் வாழும் சிரிய நாட்டு அகதிகளின் உண்மை கதைகளின் ஊடாக,**

**பயிற்றுவித்தல், பதிப்பாக்கம் மற்றும் மொழிபெயர்ப்பு இமான் அவுன்** Iman Aoun

Part of the Social Psychology Program Care – Jordan, June 2015

© ASHTAR Theatre - 2016

**சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் - இலங்கை தயாரிப்பு**

இயக்கம்

ஜயம்பத்தி குருகே / அருண் வெலென்தேவே – பிரேமதிலக்க

**சமர்ப்பித்தல**

Stages Theatre Group மற்றும் Mind Adventures

**ஆக்கத்திற்கான ஒத்துழைப்பு**

ஜெர்மன் கலாச்சார மத்தியநிலையம் - இலங்கை

**முதல் காட்சி**

2016 ஜுன் மாதம் 20ம் திகதி

ஜெர்மன் கலாச்சார மத்தியநிலையம் - இலங்கை

**ஆக்கத்தின் காட்சி நேரம்**

60 நிமிடம் (இடைவேளை இல்லை)

**மொழி**

தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்

அட்டைப் படம்: சஞ்சீவா உபேந்திரா, மோனோலோக் 02 ஐ நிகழ்த்துகிறார், பிரௌதா புவானேகா வால் புகைப்படம் எடுக்கப்பட்டது

# உள்ளடக்கம்


**சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் , 2014** **05**

**சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் – International Artist Call** **06**

**சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் - இலங்கை தயாரிப்பு** **06**

உருவாக்க செயன்முறை தொடர்பாக இயக்குனரின் சிறு குறிப்பு - ஜயம்பத்தி குருகே 08

பயிற்சியின் இடையில் இயக்குனரால் எழுதப்பட்ட குறிப்பு 11

**பாத்திரங்களை கட்டியெழுப்புதல் - நடிகர்களுக்கான பயிற்சி - நடிப்பு பயிற்சி** **15**

பயிற்சி பெறுவதற்கு முன் நடிப்பவரின் உள மட்டத்தை இனங்காணுதல் 15

திரைக்கதையை வாசிப்பதன் முக்கியத்துவம் என்ன? 16

பாத்திரத்தின் வரலாறை நடிகரின் கற்பனையை கொண்டு கட்டியெழுப்புதல் 17

திரைக்கதைக்கு ஏற்ப நடிகரின் மனதினுள் சம்பவங்களை முறையாக பதிய வைத்துக்கொள்ள இடமளித்தல 18

வசனங்களை உச்சரிக்கும்போது பானிகள்(வடிவங்கள்) உருவாவதை தவிர்த்தல

21

வசனங்களை அடிப்டையாகக் கொள்ளாத நடிப்பு 23

நடிகரின் சாதாரண பழக்கவழக்கங்களை இனங்காணல் 25

நடிப்பவரின் பழக்கங்களை அறிந்து கொள்வது 26

புகைப்படம் மற்றும் கானொலிகள் பற்றிய கற்கை 27

சிரியாவின் தற்போதைய நிலை 27

நல்ல உடைகள் - பழசாகிவிட்டது 29

இனிமையற்ற குரல் - தரித்திரமான சப்தம 30

சோர்வடைந்த முகம 31

நடிகர்கள் எதிர்பார்க்காத அனுபவங்கள் 31

வதை முகாம 32

கதை கேட்க ஒருவரும் இல்லாதிருத்தல்

**உலக அகதிகள் தினம்** **36**

**சுய விமர்சனம் ஒன்று** **38**

**சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் - இலங்கை தயாரிப்புக் குழு** **40**



# சிரியன் நாட்டு சுய உரையாடல்

2014ம் ஆண்டு பாலஸ்தீன் யுளாவயச நாடகக் குழு ஊயசந துழசனயெ நிறுவனம் ஊடாக அம்மானிலுள்ள சிரியன் நாட்டு அகதிகள் பற்றிய செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அழைக்கப்பட்டனர். யுளாவயச நாடகக் குழு தனது முதன்மையான ஒரு நாடகமான 2010 ஆண்டில் தயாரிக்கப்பட்ட காஸா சுய உரையாடலானது உலகில் பலரின் கவனத்தை ஈர்த்திருந்தது. காஸா சுய உரையாடல் ஊடாக காஸா எல்லையில் சுற்றி வலைப்பிற்குள் சிக்கிக்கொண்ட இளைஞர்களின் எழுத்து மூல ஆதாரங்கள் 18 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு 36க்கு மேற்பட்ட நாடுகளுக்குள் விரிவடைந்ததுடன் உலகம் முழுவதும் ஒரு நாளில் 1700க்கு மேற்பட்ட இளைய கலைஞர்களால் நடித்துக்காட்டப்பட்டது.
காஸா சுய உரையாடல் வெற்றியின் பின் யுளாவயச நாடகக் குழு
சிரியன் நாட்டு சுய உரையாடல் ஊடாக பல்வேறு வயதுகளில் உள்ள
120 அகதிகளுடன் செயற்பட்டனர். இச் செயற்திட்டத்தின் ஊடாக சிரியன்
நாட்டு அதிகளால் எழுதப்பட்ட 20 சுய உரையாடல்கள் உருவாகின.

நிரஞ்சனி சண்முகராஜா
சுய உரையாடல் 03
நடிப்பின்போது
புகைப்படம் - பிரவ்ட புவனேக்க

## சிரியன் நாட்டு சுய உரையாடல்
## சர்வதேச கலைஞர்களுக்கான அழைப்பு

பாலஸ்தீன யுளாவயச நாடகக் குழு, உலக அகதிகளின் தினம் அதாவது 2016 ஜூன் 20ம் திகதி சிரியன் நாட்டு சுய உரையாடல்கள் 20ல் ஏதாவது ஒன்றை தத்தமது நாடுகளில் முன்வைக்குமாறு உலகம் முழுவதிலும் உள்ள கலைஞர்களுக்கு அழைப்புவிடுத்தனர். இலங்கை இவ் அழைப்பிற்கு ஏற்ப சிரியன் சுய உரையாடல்களில் 04 நாடகமாக தயாரித்து ஏற்றுக்கொண்டது.

## சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் - இலங்கை தயாரிப்பு

“சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல்” இலங்கை தயாரிப்பிற்காக ஸ்டேஜஸ் நாடக குழு (Stages Theatre Group) மற்றும் மயிண்ட் எட்வெண்ஜர்ஸ் நாடக குழுவினர் (Stages Theatre Group) ஆக்கத்திற்கான பங்களிப்பை வழங்கியுள்ளனர். இங்கே ஸ்டேஜஸ் நாடக குழுவிற்காக ஜயம்பத்தி குருகே சிங்கள மொழியில் இரண்டு சுய உரையாடல்களையும் தமிழ் மொழியில் ஒரு சுய உரையாடலையும் இயக்கியதுடன் எட்வெண்ஜர்ஸ் நாடக குழுவிற்காக அருண் வெலென்தேவே பிரேமதிலக்க ஆங்கில மொழியில் ஒரு சுய உரையாடலையும் இயக்கியுள்ளனர்.

இந்த கற்கை வள தொகுப்பின் ஊடாக கலந்துரையாடப்படுவது ஜயம்பத்தி குருகே அவர்களால் இயக்கப்பட்ட சுய உரையாடல் மூன்றின் உருவாக்கச் செயன்முறைகளும் நடிகர்களுடன் நடாத்திய பயிற்சிகள் பற்றியதாகும்.

ஜயம்பத்தி குருகே
Stages Theatre Group,
இணை இயக்குனர் - சிரியன் நாட்டு சுய உரையாடல



அருண் வேலெந்தேவே □ பிரேமதிலக்க
Mind Adventures Theatre Company,
இணை இயக்குனர் - சிரியன் நாட்டு சுய உரையாடல்



## உருவாக்க செயன்முறைகள் தொடர்பில் இயக்குனரின் சிறு குறிப்பு - ஜயம்பத்தி குருகே

சிரிய நாட்டு அகதிகளின் கதைகள்  சில அடங்கிய நாடக பிரதி ஒன்று எங்களுக்கு கிடைத்தது. அது ஜோர்தானில் வசிக்கும் சிரிய நாட்டு அகதிகளின் உண்மை கதைகளை அடிப்படையாக கொண்ட அரபு மொழியில் தயார் செய்யப்பட்ட பிரதியாகும். அதில் எங்களுக்கு கிடைத்தது ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பிக்கப்பட்டதாகும். சில நண்பர்களின் உதவியுடன் அந்தக்கதைகள் தமிழ் சிங்கள மொழிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது.

**அடுத்து என்ன செய்வது**? இந்த வார்த்தைகளை உயிரூட்ட வேண்டும். உயிரூட்டுவது என்பது வார்த்தைகளை யாராவது சொல்வதோ அல்லது வாசிப்பதோ அல்ல. “யாராவது ஒருவர் ஏன் இந்த வார்த்தைகளை சொல்ல வேண்டும்.?” இது போன்ற வார்த்தைகள் “மனிதர்களின் வாயிலிருந்து ஏன் வெளியாகின்றது?” என்று நாங்கள் தேட ஆரம்பித்தோம்

நாங்கள் ஒருபோதும் சென்றிராத, கண்டில்லாத,தெரியாத,அறிமுகம் இல்லாத நாட்டிலுள்ள மனிதர்களின் அனுபவங்களின் தொகுப்புதான் பிரதியாக எங்கள் கைகளுக்கு கிடைத்துள்ளது. உண்மையான  கலைஞர்கள் என்ற வகையில் அந்த பிரதியை கொண்டு நாடகம் ஒன்றை தயாரித்து, பார்வையாளர்கள் முன்னிலையில் அரங்கேற்றி கைத்தட்டல் பெறுவதா, அல்லது சிறந்த நாடகம் ஒன்றை செய்தோம் என்று பாராட்டை பெறுவது என்பதா? எங்களது பொருப்பு என்னவென்று குழுவாக நாங்கள் கதைக்க ஆரம்பித்தோம். அந்த கதைகளோடு விளையாட எங்களுக்கு உரிமையில்லை.அந்தளவிற்கு இந்த சிரிய நாட்டு சுய உரையாடல்கள் கவலைக்கிடமானது என்று எங்களால் உணர முடிந்தது

உலக நாட்காட்டியில் அகதிகளுக்காக நாள் ஒன்றை ஒதுக்குவதற்கு இந்த உலகத்தில் இருக்கும் மாமனிதர்கள் மற்றுமின்றி எங்களை போன்ற சிறிய மனிதர்களும் இணங்கியுள்ளார்கள். அந்தளவிற்கு இந்த பிரச்சினை எங்களுக்கு சாதாரணமாகிவிட்டது. அதற்காக ஒதுக்கப்பட்ட தினத்தில் இலங்கையினுள் சிறு குழுவோடாவது அந்த அகதிகளின் கதையொன்றை பகிர்ந்துகொள்வதே எமது நோக்கமாக இருந்தது. அந்த பிரச்சினை

தொடர்பாக கொஞ்ச நேரமாவது கூருணர்வாக கொண்டு அது ஒரு பிரச்சனை என்று ஆழமாக சிந்தித்து எங்களால் செய்யக்கூடிய ஏதாவது விடயமுள்ளதா என முயற்சி செய்தோம். அதே போன்று இந்த படைப்பிற்கு தெரிவு செய்யும் கலைஞர்களுக்கு இந்த பிரச்சினை தொடர்பில் சில அனுபவங்களை பெற்றுக்கொடுக்க, சிறிது நேரத்திற்காவது அந்த கலைஞர்களுக்கு அகதிகள் பற்றிய உணர்வினை ஏறப்படுத்த, மட்டுமின்றி இரசிகர்கள் ஒரு நாடகமாக இதை பார்ப்பதைவிட ஒரு அகதியின் கதையை கேட்டுக்கொண்டிருப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்த வேண்டுமென நாடக குழுவாக நாங்கள் தீர்மானித்தோம். அதேபோன்று உலகத்தில் எங்கேயாவது ஒரு இடத்தில், எதாவது ஒரு காரணத்திற்காக அகதிகளானவர்களுக்காக முன் வருவதற்கு நாங்கள் முயற்சி செய்தோம்'

சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் என்பது ஒரு வித சுயசரிதை. அதாவது ஒரு நபரின் அனுபவங்களை தனியாக அறிக்கையிடல். இதிலுள்ள வார்த்தைகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், மற்றும் அனுபவங்கள் இப்பாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகர்களுக்கு நெருக்கமாவது மிக முக்கியம். சுருக்கமாக கூறுவதெனில் “சிரிய நாட்டு அகதிகளின் அனுபவங்களை நடித்துகாட்டும், இலங்கையின் நடிகர்களுக்கு அது தொடர்பில் ஒரு கருத்து இருக்க வேண்டியது முக்கியம். அதற்காக என்ன செய்யலாம்?”

தயாரிப்பாளர் என்ற வகையில் பாத்திரங்களை கட்டியெழுப்புதல் - நடிகர்களுக்கான பயிற்சி மற்றும் நடிப்பு பயிற்சிக்காக பிரவேசிப்பது மேற்குறிப்பிடும் கருத்துகளை அடிப்படையாக கொண்டேயாகும். சிரிய நாட்டு அகதிகளின் சுய உரையாடல் எனும் ஆக்கத்தின் செயன்முறை ஆரம்பத்திலேயே இதன் நாடக பிரதி எழுதி முடிவடைந்திருந்தமையால் இதன் நடிப்பு மற்றும் பாத்திரங்களை கட்டியெழுப்பும்போது மட்டும் அடிப்படை டிவைசின் (னுநஎளைநைெ )நடிப்பு முறை பயன்படுத்தப்பட்டது.

ஒரு சாதாரண பயிற்சியின்போது அநேக நேரங்களில் ஒரே நடிப்பு பயிற்சியை மீண்டும் மீண்டும் செய்வதை நாங்கள் பார்த்திருக்கின்றோம். ஆனால் இந்த பயிற்சி செயன்முறையில் ஒரு நடிப்பு பயிற்சியை மீண்டும் மீண்டும் செய்யாமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கான அடிப்படை காரணமாக இந்த ஆக்கத்தின் உள்ளே பேசப்படுவது சிரிய நாட்டு மக்களுக்கு எதிர்பாராமல் முகம் கொடுக்க நேர்ந்த துன்பகரமான கொடிய சம்பவங்கள் என்பதேயாகும். அந்த கவலைக்கிடமான சம்பவங்களுக்கு முகம் கொடுத்த பல மக்களின்

கதைகளை ஒன்றுதிரட்டியே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. அந்த கவலைக்கிடமான அனுபவங்கள் ஒவ்வொரு சந்தரப்பத்திலும் மாற்றமடைந்துள்ளதை நாடக பிரதியிலிருந்து எங்களால் அறிந்துக்கொள்ள முடிந்தது. அந்த நிச்சயமற்ற மற்றும் அபாயகரமான நிலைமை இந்த முழு பயிற்சி செயற்பாடுகளிலும் நடைமுறைப்படுத்துவதற்காகவே ஒரே பயிற்சியை மீண்டும் மீண்டும் செய்யாமல் இருப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டது. நடிகர்கள் ஒரே பயிற்சியை மீண்டும் மீண்டும் செய்வதால் அவர்களின் உணர்வுகளிலுள்ள புத்துணர்வு பலவீனமடைவதுடன் பயிற்றுவிக்கப்பட்ட அல்லது ஒரு வரையறைக்குள் உள்ள புத்துணர்வற்ற முன்வைப்புக்களே மேலெழும்பும். இது இந்த ஆக்கத்தின் நடிப்பை கட்டியெழுப்பும்போது தேவையற்றதாக இனங்கண்டுக்கொண்டதாலும் பயிற்சி காலங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான அனுபவங்களின் தொகுப்பு ஊடாக பாத்திரங்களை உருவாக்குவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இதனை பயன்படுத்த முயற்சி செய்யப்பட்டது

ஒரு இயக்குனர் தனது குழுவின் பயிற்சி காலங்களின்போது நடிகர்கள் இயக்குனரின் வழிக்காட்டலின்கீழ் பாத்திரத்தை கட்டியெழுப்புதல், வசனங்களை சரியாக கிரகித்து இருப்பதாக இயக்குனர் புரிந்துக்கொண்டதன் பின்னர் மீண்டும் அதை செய்வித்தல், அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு நடிகர்களுக்கு சொல்லுதல் மற்றும் மாதிரிகளை வடிவமைத்தல் என்பது சாதாரண நிகழ்வுகளாகும். ஆனால் இங்கே இயக்குனருக்கு தேவையான விதத்தில் பாத்திரத்தை கட்டியெழுப்பவதற்கு இயக்குனர் மற்றும் நடிகர் எனும் இருவரின் ஒத்துழைப்போடு கட்டியெழுப்பபடும் பாத்திர உருவாக்கத்தை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

## பயிற்சியின் இடையில் இயக்குனரால் எழுதப்பட்ட குறிப்பு......

June 2016

நான் புதிய குழந்தை ஒன்றை பெற்றெடுப்பதற்காக கருவரை ஒன்றை தேடுகின்றேன். உனது சந்திப்பு மற்றும் இணக்கத்தை நான் மிகவும் அன்புடனும் கௌரவத்துடனும் வரவேற்கிறேன். முதல் குழந்தையை பெற்றுக்கொடுக்க முதலாவது நாம் ஒரு நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். நான் ஒரு விந்தானால் நீ கருமுட்டையாக இருத்தல் வேண்டும். பயிற்சி காலங்களில் எமது ஒற்றுமையின் மூலம் படிப்படியாக கிடைக்கும் கருவின் வளர்ச்சியில் நாம் இருவருக்கும் சமமாக உரிமை பகிரப்பட்டுள்ளது. நமது குழந்தையின் முகத்தை பார்ப்பதற்கு. தீர்ப்பு வழங்குவதற்கு , தாழ்த்துவதற்கு, குரோதம் செய்வதற்கு, மற்றும் அன்பு செலுத்துவதற்கு ஆர்வத்துடன் பார்வையாளர்கள் விரல்விட்டு எண்ணி கர்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். இவை அனைத்தையும் அவர்களிடமே ஒப்படைக்கிறேன். ஏனென்றால் அனைவரையும் என்னால் திருப்திப்படுத்த முடியாது எமது பயிற்சி எனும் கூடலின் போது நான் பல முறை உச்ச இன்பத்தை அடைந்தேன். சிலநேரம் நான் பெற்றுக்கொண்ட திருப்தியை பார்வையாளர்களும் பெற்றுக்கொள்ள முடியாமல் போவதையிட்டு கவலையடைகிறேன். எவ்வாறாயினும் உங்களுக்கும் எனக்குமிடையில் உள்ள பிணைப்பு இந்த நடிப்பு உருவாக்கம் முடியும் வரை ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடு மட்டுமல்ல என்பதை நான் உறுதியாக அறிவேன்..

இப்படிக்கு

ஜயம்பத்தி குருகே

உலகத்தின் அதிகாரமிக்க அரசியல் போராட்டங்களின் பிரதிபலனாக உருவாக்கப்பட்ட சிரிய நாட்டு நெருக்கடிக்களுக்கு இடையே சிக்குண்டு, இத்தருணத்திலும் உலகில் சில இடங்களில் அகதிகளாக பலர் இருக்கின்றனர். இவர்கள் முகம் கொடுத்த, முகம் கொடுக்கும், எதிர்காலங்களில் முகம் கொடுக்கவுள்ளவற்றை வார்த்தைகளால் விபரிக்க முடியாத கவலைக்கிடமான பல விடயங்கள் இருப்பதை பற்றி நாங்கள் மனதில் வைத்துக்கொண்டு, அடுத்து இவ்வாறான கவலைக்கிடமான சம்பவங்களுக்கு முகம் கொடுப்பவர் நீங்கள், அல்லது நான் என்பதை மனதில் வைத்து, இயக்குனர் மற்றும் நடிப்பு பயிற்சியாளராக இந்த சிரிய நாட்டு சுய உரையாடல் -இலங்கை உருவாக்கத்தின் இயக்க செயற்பாடுகளில் நடிகர்களுடன் இணைந்து மேற்கொண்ட பாத்திரங்களை கட்டியெழுப்புதல் - நடிகர்களின் பயிற்சி நடிப்பு பயிற்சி தொடர்பிலான இயக்கத்தை முடிவு செய்து மூன்று வருடங்களுக்கு பின் அந்த ஞாபகங்களை மீண்டும் வரிசைப் படுத்துவதற்கான ஆயத்தம் இதுவாகும்.

அடுத்த பக்கம்
ஸ்டேபான் திரிமான்ன
சுய உரையாடல் 04
நடிப்பின்போது
புகைப்படம் - பிரவ்ட
புவனேக்க


POR



# கதாபாத்திரத்தை கட்டியெழுப்புதல் - நடிகர்களுக்கான பயிற்சி - நாடக பயிற்சி

இந்த அத்தியாயத்தில் சிரியன் நாட்டு சுய நாடகத்தை தயாரிக்கும்போது மேற்கொண்ட கதாபாத்திரத்தை கட்டியெழுப்புதல் - நடிகர்களுக்கான பயிற்சி □ நாடக பயிற்சி ஆகியவற்றை கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பயிற்சி செயற்பாடுகள் மற்றும் நாடக பயிற்சிகள் இத்தயாரிப்பில் நடித்த கலைஞர்கள் மூவரின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்புடன் இடம்பெற்றது. மேலும் நாடகத்தின் தேவைக்கு ஏற்ப புதிய பயிற்சிகள் சிலதும் பரீட்சார்த்த செயற்பாடுகளும் இயக்குனர் உருாக்கியதோடு அவைகளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு ஒட்டு மொத்த செயன்முறையினுள் கலைஞர்களும் இயக்குனரும் முகம் கொடுத்த பல்வேறுப்பட்ட அனுபவங்கள் மற்றும் மேற்கொண்ட தீர்மானங்கள் பற்றியும் இவ்வத்தியாயத்தில் கலந்துரையாடப்படுகின்றது.

## பயிற்சிக்கு முன் கலைஞரின் உளவல மட்டத்தை இனங்காணல்

ஒருநாள் கலைஞர் ஒருவர் பயிற்சிக்கு வந்து தனது கையடக்க தொலைப்பேசியை தடவிக்கொண்டிருந்தார்.அவரது முழுக்கவனமும் கையடக்க தொலைப்பேசிக்குள்ளேயே தான் இருந்தது என்பதை புரிந்துக்கொள்ள அதிக நேரம் செல்லவில்லை. அவர் அந்த பயிற்சிக்கு மனதளவில் ஆயத்தமாக இல்லை என்பது தெரியவந்தது. இப்பொழுது என்ன செய்வது? நாங்கள் மெதுவாக கதைக்க ஆரம்பித்தோம். அவர் இன்று பயிற்சி செய்வதற்கு சிரமமாக இருப்பதாக கூறினார். இயக்குனராக இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? நாங்கள் தொடர்ந்து கதைத்துக்கொண்டு போனோம். அந்த கதையில் அவர் புதிதாக ஒரு காதல் கதையில் அகப்பட்டுள்ளார் என்பதை எங்களால் புரிந்துக்கொள்ள முடிந்தது. எங்கள் கதை தொடர்ந்து செல்லும்போது அவரது சிரியன் சுய உரையாடலை அவர் காதலிப்பவருக்கு ஒரு காதல் கடிதம் எழுதுவது போன்று அவரது வார்த்தைகளில் எழுதுமாறு நான் கேட்டுக்கொண்டேன். அவர் அதை ஒரு தடுமாற்றமுமின்றி செய்துக்கொண்டு போனார்.

அந்த நாள் முழுவதும் காதலிப்பவர்களுக்கு இக்கதையை எப்படி சொல்வது என்பது என்று முயற்சிப்பதாக இருந்தது. அது ஒரு சிறந்த பயிற்சியாக அமைந்தது. பயிற்சிக்கு ஆயத்தமில்லாத ஒரு நடிகருடன் திருப்தியடைய கூடியளவிற்கு பயிற்சியை பெற்றுக்கொள்ளக்கூடியாக அமைந்தது. அவரது உளவலம் பற்றி கவனத்திற் கொண்டதால் அதை தொடர்ந்து இயக்குனராக இடம்பெற செய்வதும் முக்கியமானது என்பதை புரிந்துக்கொள்ளவும் முடிந்தது. அதை ஒரு பயிற்சியாக ஏனைய கலைஞர்களுடன் இடம்பெற செய்வதும் சிறப்பானது என்று புரிந்தது.

## பயிற்சிக்கு முன்பு நடிகர்களின் உளவள மட்டத்தை இனங்காணல்

ஒருநாள் நடிகர் ஒருவர் பயிற்சிக்காக வந்து தனது கைத்தொலைப்பேசியை அழுத்திக்கொண்டிருந்தார். அவரின் முழு கவனமும் கைத்தொலைப்பேசியில் இருப்பதை புரிந்துக்கொள்ள அதிக நேரம் செல்லவில்லை. அவர் பயிற்சி செய்வதற்கான ஆயத்தத்தில் இல்லை என்பது புரிந்தது. இப்பொழுது என்ன செய்வது? நாங்கள் மெதுவாக கதைக்க ஆரம்பித்தோம். இன்று பயிற்சியில் ஈடுபட கஸ்டமாக இருக்கிறது என்று அவர் கூறினார். இயக்குனராக நான் என்ன செய்வது என்று சிந்தித்தேன் ? தொடர்ந்து நாங்கள் கதைத்தோம். அந்த கதையின் ஊடாக அவர் புதிதாக ஒரு காதல் உறவில் ஈடுபட்டுள்ளதை புரிந்துக்கொள்ள முடிந்தது. எங்கள் கதையை தொடர்ந்துக்கொண்டிருக்கும்போதே அவரின் சிரியா நாட்டு சுய விமர்சனத்தை அவர் காதலிப்பவருக்கு வார்த்தைகளாக எழுதுமாறு வேண்டுகோள் விடுத்தேன். எழுதிய பின்பு அனைவருக்கும் கேட்கும்படி வாசிக்குமாறு கூறினேன். அவர் அதை எந்தவொரு தயக்கமுமின்றி ஏற்றுக்கொன்டார். அன்று நாள் முழுவதும் காதலிப்பவருக்கு இக்கதையை எப்படி சொல்வது என்ற முயற்சியில் ஈடுபட்டோம அது மிகவும் நல்ல பயிற்சியாக அமைந்தது. உளவியல் நிலை தொடர்பாக கவனத்தில் கொண்டதால் பயிற்சிக்கு ஆயத்தமில்லாத நடிகருடனும் நன்றாக

பயிற்சிகளை செய்யக்கூடியதாக அமைந்தது. ஒரு இயக்குனராக அதை தொடர்ந்து கவனிப்பது மிக முக்கியமானது என்றும் புரிந்தது. அதை ஒரு பயிற்சியாகவே மற்ற நடிகர்களுடனும்  செயற்படுத்துவது உசிதமானது என்றும் புரிந்தது.

## பயிற்சிக்கு முன் நடிகர்களின் உளவியல் நிலையை இயக்குனர் அறிந்திருத்தல் மிக முக்கியமானதா?

நடிகர்கள் பயிற்சிக்கு வருவது பல்வேறு உளவியல் மட்டங்களுடன். அவர்கள் பயிற்சிக்கு ஆயத்தமில்லாமல் இருந்தால் பயிற்சி செய்வது மிகவும் கடினம். விசேடமாக இதுபோன்ற நாடகங்களை உருவாக்கும்போது அவர்களின் உளரீதியிலான நிலைப்பாடு மிக முக்கியம். மேலும் நடிப்பை கட்டியெழுப்புவதற்கு நடிகர்களின் பங்களிப்பு முக்கியமானது. பயிற்சிக்கு வரும்போது ஒரு நடிகர் அதற்கான ஆயத்தமில்லாமல் வருவது இயக்குனர் எதிர்பாராத ஒன்றாகும். நடிகர் ஒருவரின் அந்த நிலையை பொருத்துக்கொள்வது அல்லது அதற்கமைய பயிற்சியை மாற்றுவது இயக்குனரின் செயற்பாடு அல்ல. ஆனால் இயக்குனர் அதற்கு பதிலாக நடிகர்களை இந்நாடகத்திலிருந்து அகற்றவும் முடியும். அவ்வாறு செய்த  உதாரணங்களையும்  தேவையான அளவில் பார்த்திருக்கிறோம்.

ஆனால் இங்கே விசேடமாக டிவைசின(னுநளளைநெ) செயன்முறையினுள் நடிப்பை கட்டியெழுப்பும்போது இதுபோன்ற நிலைமைகள் பிரச்சினையாகாமலஉசநயவளைந தீர்த்துக்கொள்வதற்கான ஆற்றல் அதிகமுள்ளது. மிக முக்கியமானது என்னவெனில் நாம் பயன்படுத்தும் முறைமை  தொடர்பில் உள்ள தெளிவுடன் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு சிறப்பான பதிலை தேடிக்கொள்ள முடியும் என்பதை அறிந்துக்கொள்வதாகும். எவ்வகையான முறைமையின் கீழ் தயாரிப்பில் ஈடுபட்டாலும் தமது நடிகர்கள் அதற்கு ஆயத்தமாக இருக்கிறார்களா  என்று தயாரிப்பாளர் விழிப்பாக இருப்பது உருவாக்கத்திற்கு மட்டுமின்றி தயாரிப்பாளருக்கும் நடிகர்களுக்கும் இடையில் இருக்கும் தொடர்பிற்கும் மிக முக்கியமாகும்.

## நாடக பிரதியை வாசிப்பதன் முக்கியத்துவம் என்ன?

நாடக பிரதியை கையில் கொண்டு உருவாக்க செயற்பாட்டில் ஈடுபடும் தயாரிப்பாளர்கள் முதலில் தமது நடிகர்களுடன் ஒன்றாக பிரதியை வாசிப்பதுடன் அதன் மூலம் நடிகருடன் ஆக்கத்தின் தலைப்பு தொடர்பாகவும் அடிப்படை கலந்துரையாடலை நடாத்துவார்கள். அதேபொன்று

- ☒ வசனங்களை நடிகர்களுக்கு பழக்கப்படுத்த
- ☐ அந்த எழுத்தாக்கத்திலுள்ள மொழி நடையை இனங்காண
- ☐ பிரதியினுள் உள்வாங்கப்பட்டுள்ள தகவல்களை இனங்கண்டுக்கொள்ள
- ☐ பாத்திரத்தின் தன்மையை இனங்கண்டுக்கொள்ள
- ☐ பிரதியினுள் உள்வாங்கப்பட்டுள்ள சமூக, அரசியல் பின்னனியை இனங்கண்டுகொள்வது போன்ற காரணங்களை நாடக பிரதியை வாசிப்பது மூலம் தெரிந்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.இந்த செயற்பாடுகள் எங்களது ஆக்கத்தின் ஆரம்பத்திலேயே இடம் பெற்றது.

இங்கே மேற்கூறப்பட்ட கருத்துக்களை தவிர எங்களது விசேட கவனத்திற்கு உட்படுவது.இந்த நாடக பிரதியின் மூலம் அதன் உள்ளே இருக்கும் பாத்திரங்களை இனங்காணும் தரவுகளை (பெயர்,ஊர்,வயது,தொழில் போன்ற) தெரிந்துக் கொள்வதையும் விட , சிரிய நாட்டு நெருக்கடி நிலைமையின் அனுபவங்கள் மனிதர்களின் வாழ்க்கைக்கு,அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு மட்டுமன்றி மொத்த சமூகத்திற்கும் ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பான தகவல்களை வெளிக்காட்டுவதாகும். பிரதியினுள் நிலையான அடையாளத்தை உறுதிப்படுத்தும் பாத்திரங்கள் எதுவும் இல்லை என்பதை இனங்காண முடிந்தது. இந்த விசேடத்தன்மையை பயன்படுத்தி எமது சிந்தனா சக்தியையும் ஒன்று திரட்டி பாத்திரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான சுதந்திர நிலை மிகுதியாக இருந்தது. அதனால் பிரதியினுள் இருந்த அடிப்படை சம்பவங்கள் மற்றும் தரவுகளை பயன்படுத்தி நடிகர்கள் மற்றும் இயக்குனரின் ஒத்துழைப்புடன் இங்கே ஒவ்வொரு சுய உரையாடல் பாத்திரங்களையும் கட்டியெழுப்பும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

பாத்திரத்தின் வரலாறை நடிகரின் யூகத்தின் ஊடாக கட்டியெழுப்புதல்

நடிகர்களுக்கு வினாக்கொத்து ஒன்றை வழங்குதல்
பயிற்சியின்போது முன்அறிவித்தலின்றி நடிகருக்கு இடைவினாக்கொத்து வழங்கப்படும். அவ்வாறு வினா எழுப்புவது மிகவும் சுமூகமாக இடம்பெறும். ஒரு விதத்தில் நிர்க்கதியாக இருக்கும் இனந்தெரியாத ஒரு நபரை இனங்கண்டு கொள்வதற்காக சுமூகமாக மேற்கொள்ளும் கருத்தாடல் சுபாவம் அந்த செயற்பாட்டில் இருந்தது. இந்த கருத்தாடல் இரண்டு மணித்தியாலங்கள் நடாத்தப்பட்டது. அந்த கருத்தாடல்களுக்கிடையில் தேநீர் அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல்களும் இடம்பெற்றன. இந்த சுதந்திரம் இந்த கருத்தாடலை கட்டியெழுப்புவதற்கும் நடாத்தி செல்வதற்கும் பங்களிப்பு செய்தது எவ்வாறாயினும் அங்கே கேட்கப்படும் கேள்விகளுக்கு நடிகர் பதிலளித்தல வேண்டும். பிரதியில் காணக்கூடிய தகவல்களை பயன்படுத்தி தன்னை அந்த பாத்திரம் மற்றும் அனுபவங்களை பெற்ற நபராக நினைத்து, இந்த பிரதிக்கு ஏற்றவகையில் பாத்திரத்தை கட்டியெழுப்ப தேவையான புதிய தகவல்களை சேர்த்துக்கொள்வதற்கான சுதந்திரம் இந்த செயன்முறையில் இருந்தாலும், நடிகரால் சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து விடயங்களும் நம்பிக்கைகுரியதாகவும் நியாயமானதாகவும் இருத்தல் வேண்டும்.

- ☐ வயது
- ☐ வதிவிடம்
- ☐ பெற்றோர் விபரம்
- ☐ கிராமத்தின் தன்மை
- ☐ கல்வி



சுபா விஜேசிரிவர்தன சுய உரையாடல் 01 நடிப்பின்போது புகைப்படம் -பிரவ்ட புவனேக்க

- ☐ நண்பர்களின் தகவல்கள்
- ☐ கலவரம் ஆரம்பிப்பதற்கு முன்னரான தகவல
- ☐ லவரம் ஆரம்பிக்கப்பட்ட விதம
- ☐ நெருங்கிய உறவுகள் இறந்ததை கண்ட விதம்
- ☐ கிராமத்தை கைவிட்டு செல்லும் விதம்
- ☐ இப்போது செய்வது என்ன?
- ☐ அகதி முகாமின் அனுபவங்கள்

சரளமாக கூறினால் ஒருவர் அகதியாகும்போது அவருக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று எதிர்பாரக்கும் அனைத்து விடயங்களும் நடிகர்களிடம் கேள்வியாக முன்வைக்கப்பட்டது. அந்த பாத்திரத்தையும் பாத்திரத்தின் வரலாற்றையும் நடிகர்களே உருவாக்கிக் கொள்வார்கள். இப்போது நடிகர்களுக்கு தனக்கு தெரிந்த வரலாறு ஒன்று உள்ளது. அதை அவர் நம்புவது மிக முக்கியமாகும். அதன் பின்னர் முறையாக இங்கே சொல்லப்படும் உரையாடலை அவர்களின் அனுபவங்களாக மாற்றிக்கொண்டு பயிற்சியில் ஈடுபடுவதுடன் உரையாடல்களின் அர்த்தம் மற்றும் உணர்வை வெளிப்படுத்தும் முறைகளை பார்க்கும்போது அக்கதையோடு நெருக்கம் ஏற்பட்டுள்ளதை புரிந்துக்கொள்ளும் திறன் கிடைத்தது.

### அனுபவம் ஒன்று :

“குண்டு வெடிப்புக்கள், துப்பாக்கியிச் சூடு நடக்கும் பெரிய யுத்தத்தின் நடுவே அப்பாவின் சுகயீனம். அப்பா தொடர்ந்து அவரையே சபித்துக்கொண்டிருந்தார். விரைவாக இறக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்பாவால் நாங்கள் ஆபத்தில் வீழ்வதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சத்திரசிகிச்சையின் பின்னர் அப்பா இறந்துவிட்டார். வைத்தியசாலையில் ஒக்ஸிஜன் மெஷின் மற்றும் தேவையான மருந்தும் இல்லாத காரணத்தால் தான் அவர் இறந்தார். அப்பாவிற்கு ஒக்ஸிஜன் மெினை பூட்டுவதற்கு வைத்தியர்கள் இன்னுமொரு நோயாளி இறக்கும்வரை பார்த்துக்கொண்டிருந்தார்கள்..”

இந்த சுய உரையாடலை முன்வைத்த நடிகரின் உண்மையான வாழ்க்கையில் அவரின் அப்பா இருதய நோயாளியாக மோசமான நிலையில் வைத்தியசாலையில் இருந்த கடந்த காலத்தை பற்றி நான் அறிந்திருந்தேன். அவ்வாறு அறிந்திருந்த மற்றும் தகவல்களை மையப்படுத்தி அவரிடம் சில கேள்விகளை எழுப்பினோம். அதில் அவரின் உண்மையான அனுபவம் மற்றும் பிரதியிலுள்ள விடயங்களையும் சேகரித்து பாத்திரத்திற்கு ஏற்றவகையில் வரலாறு ஒன்றை கட்டியெழுப்பினார். அந்த வினாக்கொத்து அவரின் பாத்திரத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பை வழங்கியதாக பின்னர் கூறியிருந்தார்.

## நடிகரின் மனதினுள் நாடக பிரதிக்கு ஏற்றவகையிலான சம்பவங்களை முறையாக பதிய இடமளித்தல்

நடிகரின் கைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள நாடக பிரதியின் வசனங்கள் மூலம் அர்த்தப்படுத்தப்படும் சம்பவங்கள் மற்றும் அனுபவங்கள் நடிகரின் மனதினுள் முறையாக பதிய வேண்டுமென்பது முக்கியமானது என நம்புகிறோம். அனைத்து உரையாடல்களிலும் அடிப்படையாக உள்ளது வாழ்க்கை அனுபவங்களின் தொகுப்பென்றே நாங்கள் கலந்துரையாடினோம். தேவை ஏற்படின் தமது திறமையைக் கொண்டு, அந்த வார்த்தைகளை சில உணர்வோடு முன்வைக்க நடிகர்களுக்கு முடியும். அப்போது நாடக பிரதியிலுள்ள பாத்திரத்திற்கு நியாயாத்தை ஏற்படுத்த அவர்களால் முடியும். அவ்வாறு செய்வதால் இந்நாடக பிரதியில் எழுதப்படாத, வார்த்தைகளால் கொண்டுவர முடியாத,மனித அனுபவங்கள் மற்றும் சிக்கலான மனித உணர்வுகள் விடுபடுவதற்கான சந்தர்ப்பம் இருப்பதை நாங்கள் இனங்கண்டோம். அதனால் அகதி ஒருவரின் ஆழ்மனதில் பதிந்திருக்கும் என்று நாம் நம்பும் அனைத்து ஞாபகங்கள் மற்றும் அனுபவங்களை நடிகரின் மனதினுள் ஏதோ ஒரு விதத்தில் யூகங்களாகவும் செயற்பாடுகளாகவும்

பதிவு செய்வது முக்கியமானது என்று புரிந்துக்கொள்ள நேர்ந்தது. இங்கே வசனங்களை வாய்பாடாக ஞாபகப்படுத்திக்கொள்வதை விட அந்த வசனங்கள் வெளிப்படுத்தும் அனுபவத்தின் பின்னனி நடிகரின் மனதினுள் உருவாகுவதை இலகுபடுத்துவதற்காக பயிற்சியின்போது நடிகருக்கு ஒத்துழைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

"வசனங்களை வாய்பாடமாக்க தேவையில்லை... பிரதியில் இருக்கும் சம்பவத்தை உங்களுக்கு தேவையான நேரம் எடுத்து எனக்கு சொல்லுங்கள். நீங்கள் யாரிடமாவது சொல்லும் அனுபவங்கள்,சொல்ல முடியாத அனுபவங்கள் மற்றும் நிராயாசமாக மீண்டும் மீண்டும் சொல்லக் கூடிய அனுபவங்கள் நாடக பிரதியில் இருப்பதாக புரிந்துக்கொள்ளுங்கள்."

- இயக்குனர் பயிற்சியின் இடையில்

இவ்வாறான சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் நடிகர்கள் ஓரளவிற்கு இலகுவாக உணர்ந்தார்கள். அதன்பிறகு அவர்கள் நாடக பிரதியிலுள்ள வார்த்தைகள் மற்றும் அவர்களின் வார்த்தைகளையும் பயன்படுத்தி பிரதியிலுள்ள கதையை வெளிப்படுத்த முயற்சித்தனர். அவர்கள் உரையாடலை ஞாபகப்படுத்திக்கொள்ள சிரமப்படாமல் முழு சம்பவத்தையும் கட்டியெழுப்ப முயற்சி செய்தனர். அதனுள் அவர்களின் ஞாபகத்திற்கு எற்றவகையில் நாடக பிரதியிலுள்ள வசனங்களையும் முறையாக ஒன்று சேர்க்க முயற்சி

செய்தனர். அதன் பின்னர் நடிகரால் பிரதியிலுள்ள வசனங்களை தவிர அவரால் சேர்த்துக்கொள்ளப்பட்ட வார்த்தைகள் மற்றும் மொழி நடை நாடக பிரதியிலுள்ள மொழி நடையுடன் ஒத்துப்போவதை புரிந்துக்கொள்ளும் திறன் உருவானது. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் கையிலுள்ள நாடக பிரதிகளின் சம்பவங்கள் மற்றும் உரையாடல்களை ஞாபகப்படுத்திக்கொள்ள முயற்சித்ததோடு பாத்திரத்திலுள்ள உணர்வுகளை முடியுமானளவு நடைமுறைப்படுத்தவும் கவனம் செலுத்தினார்கள். இவ்வாறு நாடக பிரதியின் சம்பவங்களை மையப்படுத்தி நடிகர்கள் தமது மனதினுள் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலான கதை ஒன்றை கட்டியெழுப்பிக்கொண்டனர். உரையாடல் என்று முடிப்பதற்கு சிரமப்படாமல் முறையாக நாடக பிரதிக்கு ஏற்றவகையில் தான் கட்டியெழுப்பும பாத்திரத்திற்கு ஏற்ப உணர்வுகளில் இருப்பதற்கு நடிகர்கள் முயற்சிப்பதை இங்கு நான் விசேடமாக காணக்கூடியதாக இருந்தது. இந்த செயற்பாட்டில் அகதி என்று நம்பக்கூடிய பாத்திரத்தின் அடிப்படை தன்மையை நடிகர்களால் மேலெழுப்பக்கூடியதை காணக்கூடியதாக இருந்தது.

## வசனங்களை உச்சரிக்கும் போது உருவாகும் சில மொழிநடைகளை தவிர்த்தல்

நடிகர்களின் கைகளுக்கு நாடக பிரதி ஒன்று கிடைத்தவுடன் முதலாவதாக உரையாடலை வாயப்பாடம் செய்துகொண்டு, சில பாணிகளைபயன்படுத்தி உரையாடல்களை உச்சரிப்பதற்கு பழக்கப்பட்டிருப்பது பொதுவாக இடம்பெறும் செயலாகும். தனக்கு பழக்கப்பட்டுள்ள,இலகுவான உரையாடல் வடிவங்கள் எந்தவொரு ஆக்கத்தினுள்ளும் நடிகர்களுக்கு தெரியாமல் ஈர்க்கப்படுபது இங்கு இடம்பெறும். இதில் நடிகர்கள் ஒரு சட்டகத்திற்குள் சிக்குண்டார்கள் என்று குறிப்பிடலாம். அவ்வாறான நடிகர்கள் தொடர்பில் பார்வையாளர்களின் பதில் மகிழ்ச்சியானதாக இருக்காது.

இந்த நிலை எங்கள் தயாரிப்பில் ஏற்படாதிருக்க தேவையான அனைத்து சந்தர்ப்பங்களிலும் பயிற்சி காலங்களிலும் முயற்சி செய்தோம்.

- வசனங்களை உச்சரிக்கும் போது ஒரு சட்டகத்தில் அல்லது வடிவங்களுக்கு ஏற்றவகையில் அமைய தயாரிப்பாளர் வழிகாட்டவில்லை
- வசனங்களின் ஆரம்பம் மற்றும் முடிவு அமையும் விதத்தை அனைத்து பயிற்சி சந்தர்பங்ககளின்போதும் ஒரே விதத்தில் செய்யாமலிருக்க நடிகர்களுக்கு வழிகாட்டப்பட்டது.
- நடிகர் ஒருவர் நடிப்பு பயிற்சியில் ஈடுபடும்போது பல்வேறு துரங்களில் இருந்து அவருக்கு செவிகொடுக்கப்பட்டது.
- நடிகரின் பயிற்சி தளங்களில் மாற்றம் செய்யப்பட்டது. (அறையின் மூலையில்,அறையின் நடுப்பகுதியில், கதிரையில் அமர்ந்து, பூமியில் இருந்து, நின்றுக்கொண்டு, வெட்டவெளி சூழலில் போன்ற)
- ஒருசில செயற்பாடுகளில் ஈடுபடும்போது வசனங்களை சொல்ல வைத்தல் நடக்கும்போது, பந்து ஒன்றை பரிமாற்றும்போது, வீட்டைபெருக்கும்போது, ஓடும்போது, கட்டிப்புரளும்போது போன்ற..)
- சில பயிற்சிகளுக்காக இந்த ஆக்கத்துடன் தொடர்பில்லாத நண்பரை அழைத்து வந்து அவருக்கு சுய உரையாடலை சொல்வதற்கு திட்டமிட்டோம்.
- தான் தனக்கே சொல்லும் கதையை போன்று வசனங்களை சொல்லச் செய்வதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த பயிற்சி செயன்முறைகளில் ஒரு நடிகருக்கு ஒரே மாதிரியான தன்மையை தவிர்த்து பல்வகையான தன்மைகளை பெற்றுக்கொடுத்ததன் மூலம் அவர் சட்டகத்தினுள் சிக்கிக் கொள்ளாமலும் வசனங்களின் உச்சரிப்பில் ஒரு மொழிநடை தொடராமல் இருக்கும் திறனையும் காணக்கூடியதாக இருந்தது.

## வசனங்களை அடிப்படையாகக் கொள்ளாத நடிப்பு

“கதையை சொல்லிமுடிக்க அவசரப்பட வேண்டாம். அந்த உணர்வோடு கொஞ்ச நேரம் இருங்கள். அது பல மணித்தியாலங்களாக இருந்தாலும் பரவாயில்லை, அந்த

மனிதருக்குள்ளே இருக்கும் உணர்வுகளை வெளிகாட்டுங்கள்.”

- இயக்குனர் பயிற்சியின் இடையில

அனைத்து பிரதிகளும் மிகச் சுருக்கமானது. அதை சாதாரணமாக சில நிமிடங்களுக்குள் சொல்லி முடிக்கலாம் என்று இனங்காணப்பட்டது. ஆனால் அந்த பிரதியிலுள்ள வார்த்தைகளுக்கு முடிந்தளவு நேரமெடுத்து தமது உணர்வை நடைமுறைப்படுத்தி சொல்லும் திறனை தேடுவதற்கு பயிற்சி ஊடாக முயற்சி செய்தோம். சிரிய நாட்டு அகதிகளின் உணர்வை வெளிப்படுத்துவதே எங்களது தேவையாக இருந்தது. அது வெறும் வசனங்களை சொன்னவுடன் வெளிவராது என்பதை அறிந்துக்கொண்டோம். அதனால் உரையாடலுக்குள் வரையறையாகாத நடிப்பை வெளிக்கொண்டுவருவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டது. அதற்காக பல்வேறு புதிய பயிற்சிகள் வழங்கப்பட்டது..

- முதலாவது உரையாடலை சொல்லுவதற்கு முன் நடிகர்கள் அதற்காக முடிந்தளவு நேரமெடுத்தல் வேண்டும். அந்த உரையாடல் சொல்லும் உணர்வுடன் காலத்தை கடத்தல் வேண்டும்.
- பிரதியினுள் தான் மிகவும் அதிர்ச்சிக்குள்ளான சம்பவத்தை சொல்வதற்காக முடிந்தளவு நேரத்தை எடுத்தல் வேண்டும்.
- சுய உரையாடல் உள்ளே நடிகருக்கு மிகவும் தாக்கத்தை எற்படுத்திய உணர்வினை அதிக நேரம் நடைமுறைப்படுத்தல் வேண்டும.
- சுய உரையாடலில் இறுதி வசனத்தை சொன்னதன் பின்னர் நடிப்பை நிறைவு செய்யாமல் முடிந்தளவு நேரமெடுத்து அந்த உணர்வை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- சுவாசித்தல்,பெருமூச்சுவிடல்,ஒரே இடத்தை பார்த்த வண்ணம் இருத்தல்,சிந்தித்தல் போன்ற மனிதர்கள் அழுத்தத்துடன் இருக்கும்போது செயற்படும் விடயங்கள் தொடர்பில் அதிக கவனத்தை செலுத்தி சுய உரையாடலை நடாத்த வேண்டும்.

இவைகளைப் போல் பல்வேறு செயற்பாடுகளை செயற்படுத்தியதுடன்

நடிகர்கள் ஒருசில நாட்களில் வசனங்களை வாசிப்பதற்கு 30-45 நிமிடம் வரை எடுத்துக்கொண்டார்கள். அந்த நேரம் நடிகர் அப்பாத்திரத்தினுள் வாழ ஆம்பித்திருப்பதை காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு நீண்டநேரம் ஒரே உணர்வுடன் தொடர்ச்சியாக இருப்பதால நடிகருக்கு முறையாக பாத்திரத்தில் உள்ள உணர்வினை இனங்கண்டுக்கொள்வது இலகுவானது என்று காணக்கூடியதாக இருந்தது.

## நடிகரின் பொதுவான பழக்கவழக்கங்களை இனங்காணல்.

### பழைய பழக்கத்திற்கு ஒரு புதிய பழக்கம்

எந்த ஒரு நபருக்கும் பொதுவான வாழ்க்கையில் அவர்களுக்கே உரித்தான பழக்க வழக்கங்களை இலகுவில் இனங்காண முடியம். இது நடிகர்களுக்கும் பொதுவானது

- நடக்கும் விதம்
- அமரும் விதம்
- கை கால்களை பயன்படுத்தும் விதம்
- சாதாரண வாழ்வில் பல்வேறு பொருட்களை உபயோகிக்கும் விதம்.
- உணவருந்தும் விதம்
- கதைக்கும் பாணியில் உள்ள விசேடத் தன்மை

தயாரிப்பாளர் என்ற வகையில் மிக கவனமாக நடிகர்களுடன் பழகுவது முக்கியம். சில நேரங்களில் நடிகர்கள் சாதாரண வாழ்க்கையிலுள்ள பழக்கங்களை நடிப்பில் வெளிப்படுத்தும் பொழுது தனக்கு தெரியாமல் மிக இலகுவாகவும் விரைவாகவும் அதனை நடிப்பில் இணைத்துக்கொள்வதை கண்டுக்கொள்ளலாம். அதேபோன்று சில நடிகர்கள் நடிக்கும்போது அதை தெரிந்தே நடிப்பில் ஈடுபடுத்துவதை காண முடியும். இவ்வாறான செயல்களை மேலெழும்ப விடாது இனங்கண்டு அதை தடுப்பதற்கு நாம் முயற்சித்தோம். இல்லையெனில் அவ்வாறு பொதுவாக மேலெழும்பும் பழக்கத்திற்கு பதிலாக ஒரு புதிய பழக்கத்தை சேர்த்துக்கொள்ளவும் முயற்சித்தோம்.

அச்செயற்பாடு நடிகர்களுக்கு கொஞ்சம் கடினமான அனுபவமாகும். காரணம், இங்கே அவர்கள் எந்நேரமும் உடற் செயற்பாடுகள் தொடர்பில் கவனத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டியுள்ளதினாலாகும். குறிப்பிட்ட காலம் அதில் கவனம் செலுத்தியதன் மூலம் நடிகர்கள் அந்த சவாலை வெற்றி பெறுவதை காணக்கூடியதாக இருந்தது. அச்செயன்முறை மூலம் புதிய பாத்திரமொன்றின் பண்புகள் வெளிவரத் தொடங்கின

**"எங்களுக்கு தெரிந்த ஒருவர்தான் நடிப்பில் ஈடுபடுவார். ஆனால் அது எங்களுக்கு தெரிந்த அவர் இல்லை. ஏனென்றால் அவரிடம் இப்போது இருப்பது நாம் இதுவரை கண்டுள்ள பழக்கவழக்கங்கள் இல்லை."**

- இயக்குனர் பயிற்சியின் இடையில

## புகைப்படம் மற்றும் கானொலி பற்றிய கற்கை

### சிரிய நாட்டின் தற்போதைய நிலைமை

ஒரு நாடகத்தை இயக்குவதென்பதே ஒரு கல்வி செயன்முறை தான். இயக்குனர்களிடமிருந்து இயக்குனருக்கு இது மாறுபடலாம். உண்மையாகவே சிரிய நாட்டினுள் இடம்பெறுகின்ற அழிவுகள் தொடர்பில் எமக்கு போதியளவு அனுபவம் இல்லை என்று முதலிலேயே எம்மால் புரிந்துக்கொள்ள முடிந்தது. அதனால் பயிற்சி காலங்களில் நடிகர்களுடன் ஒன்றாக இருந்து இணையத்தளம் ஊடாக சிரிய நாட்டில் இடம்பெற்றுள்ள துன்பகரமான சம்பவங்கள் பற்றி தேடும் தேவையேற்பட்டது. அதில் சிரிய நாட்டு அகதிகளுக்கு நாளுக்கு நாள் இடம்பெறும் சோகமான நிகழ்வுகளை எம்மால் காணக்கூடியதாக இருந்தது.

- சிரிய நாட்டின் துன்பகரமான நிகழ்வுகள் பற்றிய அடிப்படை அனுபவத்தை பெற்றுக்கொள்ளல்.
- சிரிய நாட்டு அகதிகளின் கதைகள் ,கானொலி காட்சிகள் மற்றும் அக்கதையை அவர்கள் கூறும் விதங்கள் பற்றி கற்றுக்கொள்ள முடிந்தது.
- ஆயிரக்கணக்கில் இருந்த புகைப்படங்களை பார்த்து கற்றுக்கொண்டதுடன்

சிரிய நாட்டு மனிதர்களின் பண்புகள், தோற்றம், மற்றும் அவர்களின் முகங்களிலுள்ள உணர்வுகளை இனங்காணுவதற்கு முயற்சித்தோம்.

- அகதிகள் முகாம் மற்றும் அங்கே வாழும் விதம், அவர்கள் வாழ்க்கை ஒரே இடத்தில் முடங்கி செய்வதறியாது நிர்க்கதியாக துன்பப்படும் விதத்தை இனங்காணுவதற்கு முயற்சித்தோம.
- தமக்கு நெருக்கமானவர்களின் இறந்த உடல்களுக்கு அருகாமையில் இருக்கும் மனிதர்களின் தோற்றங்கள்
- பல காயங்களுடன் நிர்க்கதியாக துயரத்தில் இருக்கும் குழந்தைகளின் பயத்துடன் கூடிய தோற்றங்கள..
- இராணுவ வீரர்களின் இடையீடு..
- அகதி முகாம்களின் தன்மை..
- கையில் கிடைத்ததை மற்றும் எடுத்துக்கொண்டு உயிரை காப்பாற்றிக்கொள்ள ஓடும் மனிதர்களின் சுபாவங்கள்

தனிமை மற்றும் தன்னிடமுள்ள அனைத்தும் சில நிமிடங்களில் இல்லாமல் போனதால் ஏற்பட்டுள்ள அதிர்ச்சி நிலை போன்றவற்றை இனங்காணுவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த கற்கைகளை ஆக்கத்தினுள் இணைந்துக்கொள்வது எவ்வாறு என்பது மற்றுமொரு சவாலாகும். நாங்கள் பார்க்கும்,சேர்த்துக்கொள்ளும் அனைத்து தகவல்களையும் ஒரு ஆக்கத்தினுள் உள்வாங்க முடியாது. உண்மையில் அவ்வாறு செய்ய தேவையுமில்லை. அந்த கற்கையின் மூலம் ஆக்கத்திற்கு மிக முக்கியமானது என்று புரிந்துக்கொண்ட கருத்துக்களை மட்டும் சேர்த்துக்கொள்வதற்கு நாங்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று இனங்கண்டோம். இது ஒருவகையில் சிரியாவின் சோகமான நிகழ்வுகள் பற்றிய கற்கை போன்று உருவங்கள் மற்றும் சப்தங்களை பயன்படுத்தி நடிகர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் அனுபவ கல்வியாக இது அமைந்தது. சில கானொலி காட்சிகள் மற்றும்

புகைப்படங்களை பார்த்ததன் பின்னர் அமைதியாக தனித்தனியாக நேரத்தை கழித்தோம். அதன் பின்னர் உலகத்தில் நடைமுறையில் இருக்கும். அரசியல் அதிகாரம் மற்றும் மனிர்தர்களின் வாழ்வு தலைகீழாக மாறும்போது ஏற்படும் சோகமான நிகழ்வுகள் பற்றி நீண்டநேர கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். எவ்வாறாயினும் இவை அனைத்திலும் நடிகர்களின் மனதினுள் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கும் பாத்திரத்தை கவனத்திற்கொள்வதற்கான பின்னனியை உருவாக்கும் பயிற்சியாக இதை குறிப்பிடலாம்.

நாடக பிரதியிலுள்ள விடயங்கள் மற்றும் இணையத்தளம் ஊடாக கற்ற விடயங்களையும் மையப்படுத்திக்கொண்டு ஆக்கத்திற்கு தேவையான இணைப்புக்கள் தொடர்பாக சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது.

“ஆம்” அந்த நாட்களில் பூங்கா....வசந்த களியாட்டங்கள்.. கடற்கரையில் விளையாடிய பிள்ளைகள்..பழச்சாறுகள் நுரை ததும்பும் ஷிஷா பாணங்களை உரிந்து சுவைத்த பெண்கள் எல்லாமே நன்றாகவே நடந்தது.. ஆனால்..ஆண்களின் பாதுகாப்பை இழந்துள்ளோம்.. யுத்தம் ஆரம்பித்துவிட்டது எல்லா பக்கத்திலும்..

**- உசாத்துணை – சுலைமான் அபு காலியூன் - ஹம்ஸ்**

இந்த உரையாடல் பகுதியை கண்டவுடன் இந்நிகழ்விற்கு முன்பு இம்மனிதர்கள் எவ்வளவு அழகாக வாழ்ந்திருக்கிறார்கள் என்று எங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறது.

**நல்ல உடைகள் - பழையதாகிவிட்டது.**

இந்த பாத்திரத்தை கட்டியெழுப்பும்போது அந்த பாத்திரத்தின் ஆடைகள் எவ்வளவு முக்கியம் என்பதை நடிகர்களுடன் கலந்துரையாடினோம். புகைப்படம் மற்றும் கற்ற கானொலி காட்சிகள் ஆடை செயற்பாடுகளுக்கு வசதியை ஏற்படுத்திக்கொடுத்தது. தூசி மற்றும் குளிரில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக ஒன்றுக்கு மேல் ஒன்று என பல ஆடைகளை இம்மனிதர்கள் அணிந்திருப்பதை இனங்காண முடிந்தது.அதேபோன்று சிலர் தாம் உடுத்தியிருந்த உடையுடன் தனது உயிரை காப்பாற்றிகொள்ள ஓடியிருந்ததையும்

காணக்கூடியதாக இருந்தது. இந்த அகதிகளில் அதிகமானோர் முஸ்லிம் இனத்தவர்கள் என்று அவர்களின் உடை மற்றும் தோற்றங்களில் இருந்து இலகுவில் இனங்காண முடிந்தது. மேற்கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக் கொண்டு பழையதாகிவிட்ட நல்ல உடைகளை ஆக்கதிற்காக தெரிவு செய்தோம்.

### 0இனிமையற்ற குரல் - தரித்திரமான சப்தம்

இந்த ஆக்கதிற்காக இசையை உள்வாங்குவது எவ்வாறு என்று சிந்திக்கும்போது, மக்கள் இந்த கவலையான நிகழ்விற்குள் தமது சோகத்தை தனிப்பதற்காக பல்வேறு இசைக்கருவிகளை இசைப்பதை காண முடிந்தது.
ஸ்டேபான் ( நான்காவது சுய உரையாடலின் நடிகர்) உடன் ஏற்படுத்திய கலந்துரையாடலின் பின்னர் அவரின் சுய உரையாடலுக்காக ரெக்கோடர் (சுநஉழசனநச) இசைக்கருவி மற்றும் மவுத் ஓர்கன் (ஆழரவா ழசபயெ) இசையை இசைப்பதற்கு தீர்மானித்தோம். அவர் அவரின் பாத்திரத்திற்குள் வருவதற்காக மேற்கொண்ட பயிற்சியின் போது இசைக்கப்பட்ட இசைப்பகுதிகளை ஆக்கத்தினுள் படிப்படியாக சேர்த்துக்கொள்வதற்கான திறன் கிடைத்தது. அதன் மூலம் அவரின் பாத்திரத்தை பலப்படுத்திக்கொள்ளவும் முடிந்தது

#### அனுபவம் ஒன்று

ஒருநாள் பயிற்சியின் இடையே ரெக்கோடர் (சுநஉழசனநச) இசைக்கருவியை வாசிக்க ஆரம்பித்தோம். (என்னால் அதை இசைக்க முடியாது.) கீழத்தேய பரிகாரங்களுக்கு ஊதுகுழல் இசைப்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. அது மிக இனிமையற்ற ஒரு ஒலி. தரித்திரமான ஓசை. அந்த அழகற்ற ஒலியை இந்த நடிப்பிற்குள் சேர்ப்பதற்கு நான் முயற்சித்தேன்.அதை சிறப்பாக இந்த ஆக்கத்திறகுள் சேர்க்க முடிந்தது. ஏனென்றால் ரஞ்சனி (மூன்றாவது சுய உரையாடலின் நடிகை) அந்த சத்தத்தை கேட்டவுடன் அதிர்ச்சிக்குள்ளாவதை காண முடிந்தது.

அதனால் அந்த தரித்திரமான ஓசை எழுப்பும் இசையை அவரின் கதை

தொடங்குவதற்கு முன்பே பாவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஒட்டுமொத்த ஆக்கத்திற்குமான இசையானது பயிற்சியின்போது கையாண்ட சில பரீட்சார்த்தங்கள் மூலம் சேர்க்கப்பட்டது என்பது விசேட அம்சமாகும்.

**சோர்வடைந்த முகங்கள**

சிரிய நாட்டு மனிதர்களின் முகங்களில் இருந்த முகபாவனையை நாங்கள் கண்டோம். அவை வார்த்தைகளால் விபரிக்க முடியாத உணர்வுகள். அதேபோன்று அங்கே அதிகமானோர் முஸ்லிம்கள் என்பதையும் நாம் கண்டோம். அந்த தோற்றம் மற்றும் அவர்களின் அழுக்குடன் கூடிய தூசி படிந்த,சோர்வான தோற்றத்தை ஒப்பனையால் (ஆயமநரி) கட்டியெழுப்புவதற்கு முயற்சித்தோம்..

## நடிகர்கள் எதிர்பாராத அனுபவங்கள்

சில சந்தர்ப்பங்களில் ஆக்கத்திற்கு தேவையான பாத்திரத்தை கட்டியெழுப்பும்போது அல்லது நடிப்பை கட்டியெழுப்பும்போது பல்வேறு வகையான பரீட்சார்த்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது உண்டு. இந்த பயிற்சி செயற்பாடுகளிலும் இதுபோன்ற பல அனுபவங்களை காணமுடியும். இந்த சுய உரையாடலில் கிடைக்கும் அனுபவத்தை நடிகர்கள் மிகவும் நெருக்கமான அனுபவமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே இவ்வுருவாக்க செயற்பாட்டின் நோக்கமாகும். இந்த சுய உரையாடலினுள் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துகளின் பண்புகளை இப்பயிற்சி செயற்பாடுகளை உருவாக்கும்போது சேர்த்துக்கொண்டோம். இதனால் நடிகர்கள் எதிர்பாராத அனுபவங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. அது பொதுவான நாடக பயிற்சியில் இடம்பெறுவதைவிட வித்தியாசமான அனுபவமாகும் அதில் நடிகர்களின்

- எதிர்பார்ப்பை தகர்த்தல்
- பொதுவான பழக்கங்களை மாற்றுதல்.
- வசன உச்சரிப்பு பாணியை மாற்றம் செய்தல்
- நடிகரின் அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்தல்.
- ஒவ்வொரு தருணத்தையும் நிச்சயமற்றதாக முன்னெடுத்தல்.

போன்ற அனுபவங்களுக்கு நடிகர்களுக்கு முகம்கொடுக்க நேரிடும். இந்த

அனுபவம் சிரிய நாட்டு அகதிகளுக்குள்ளும் இருந்திருக்ககூடும் என்று நம்புகிறோம். அதன் ஊடாக சிறப்பான பயிற்சி நெறியினை கட்டியெழுப்ப முடிந்தது. அவ்வாறு பயிற்சியளித்த சில ஞாபகங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"விமான தாக்குதல்.. ஆகாய விமானங்களின் எதிரொலி எங்களுக்கு கேட்டது… குழந்தைகள் பயந்து அழத்தொடங்கினார்கள்.. அனைவரும் பாதுகாப்பை கேட்க தொடங்கினார்கள்.. நான் குழந்தைகளை தூக்கிக்கொண்டேன்.. தேவையான பலசரக்குகளை மனைவி எடுத்துகொண்டாள்.. குண்டு வெடிப்பு எங்கள் காதுகளில் எதிரொலியை ஏற்படுத்தும்போது நாங்கள் பிரதான பாதைக்கு நடந்து வந்தோம்.. நாங்கள் வீதிக்கு வந்த பிறகு எங்கள் அயலவர்களும் எங்களை போன்று பாதுகாப்பை தேடி தலை திரும்பும் திசையை நோக்கி ஒடுவதை கண்டோம்."

"இரண்டு மாதங்களின் பின்னர் இராணுவத்தினர் நகரத்தை சுற்றி வலைத்தனர்… அதன்பிறகு உண்மையாகவே எங்களுக்கு வெளியேற நேர்ந்தது…"

**-உசாத்துணை – சுலைமான் அபு காலியூன் - ஹம்ஸ்**

## வதை முகாம் ஒன்று

ஒருநாள் இரவு பயிற்சிகளில் ஈடுபட்ட போது பயிற்சி அறையின் அனைத்து மின் விளக்குகளையும் அனைத்துவிட்டு நடிகர்களை சிறு பகுதியில் தடுத்துவைத்து,வதை முகாம் போன்று சத்தமிட்டு பல பொருட்களையும் பூமியில் அடித்து,ஓலமிட்டு, கெட்ட வார்த்தைகளில் பேசி ஊதுகுழலில் அகோரமான சத்தத்தை எழுப்பி,நடிகர்களுக்கு உளரீதியிலான தாக்கம் ஏற்படுவது போன்ற சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு முயற்சித்தோம்.. அது தனித்தனியாக நடிகர்களுக்கு கொடுத்த பயிற்சியாகும். 60 -75 நிமிடங்கள் வரையான காலத்திற்குள் அதிகளவிலான சத்தங்களை ஏற்படுத்தியதுடன் பின்னர் மிகவும் ஆழமான அமைதியில் இருக்க செய்தோம். சிறு நேரத்திற்கு பின்னர் விளக்குகளை ஒளிரவிட்டு எந்தவொரு தயவையும் காட்டாது நடிகரை முன்னால் அழைத்து வந்து சுய உரையாடலில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்தோம். அந்நேரம் அவர்கள் சொல்லும் கதை மிக நீளமானது. அவர்கள் இருப்பது பயம் கலந்த தோற்றத்துடன் ஆகும். அச்சந்தர்ப்பத்தில் முன்னர் பயிற்சி பெற்றிருந்த நடிப்பினை வெளிக்கொண்டு வருவதற்கான நேரமில்லை.

தமக்கு ஞாபகத்தில் இருக்கும் கதையை சொல்வதற்கு அவர்கள் முயற்சித்தனர

## அனுபவம் ஒன்று

நிரஞ்சனி (மூன்றாவது சுய உரையாடலின் நடிகை)யுடன் இந்த செயற்பாட்டில் ஈடுபட்ட நாளில் அவள் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தாள். அவள் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் ஒன்றும் செய்துக்கொள்ள முடியாது நடுங்கிக்கொண்டிருந்தாள். அவளுக்கு அந்த நேரத்தில் நடந்தவைகள் சிறிது மறந்து போய் இருந்தது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் என்ன செய்வது.? எந்தவொரு தடுமாற்றத்தையும் காட்டாது அவள் அருகில் இருந்து கதைக்க தொடங்கினோம். மீண்டும் அவளுக்கு அனைத்தையும் முறையாக ஞாபகப்படுத்துவதற்கு முயறிசித்தோம். முகத்தை கழுவி, குடிப்பதற்கு தண்ணீர் கொடுத்தோம்.. கை கால்களை மெதுவாக மசாஜ் (அயளளயபந) செய்தோம். சில நிமிடங்களில் அவள் நல்ல நிலைக்கு மீண்டுவருவதை தடுமாற்றமின்றி பார்த்துக்கொண்டிருந்தோம். சில நாட்கள் வரை அவள் தொடர்பில் கவனம் செலுத்தினோம்.

**முக்கியமானது:** இதுபோன்ற அனுபவங்களை நடிகர்களுக்கு பெற்றுக்கொடுக்கும்போது நாங்கள் மிக கவனமாக இருத்தல் வேண்டும். முக்கியமாக நடிகர்களுடன் இருக்கும் தொடர்புகள் மற்றும் அவர்களுடைய அனுபவமானது மிக முக்கியமாகும். எவ்வாறாயினும் இதுபோன்ற அனுபவங்களை நடிகர்களுக்கு பெற்றுக்கொடுக்க திட்டமிடும்போது அச்செயற்பாடுகளுடன் கடைபிடிக்க வேண்டிய வரையறையை அறிந்திருத்தல் மிக முக்கியமாகும். நடிகர்களால் தாங்கிக்கொள்ள கூடிய வரையறை தொடர்பில் நாங்கள் மிக தெளிவான அவதானத்துடன் இருப்பது மிக முக்கியமானது என்று கவனத்திற்கொள்ளல் வேண்டும

“அதன் பிறகு நாங்கள் அதை பற்றி பேச ஆரம்பித்தோம்…எங்கள் முழுக்கதையையும் கூற ஆரம்பித்தோம்..ஆனால்…அங்கு இருந்த எவருக்கும் எங்கள் கதை முக்கியமாகவில்லை…இறந்தவர்கள் போல்…உலகமே மௌனமாகிவட்டது.”

உசாத்துணை – சுலைமான் அபு காலியூன் - ஹம்ஸ்

## கதையை கேட்க ஒருவரும் இல்லாதிருத்தல
### இந்த செயற்பாடு தொடர்பில் தயாரிப்பாளரின் குறிப்பு

பயிற்சியின்போது நான் நடிகர்களை கவனியாது இருப்பேன். அவர்கள் படும் கஷ்டங்கள் எனக்கு தெரியும். அகதிகள் படும் கஷ்டங்களின் அனுபவங்களை நடிகர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது எனது தேவையாக உள்ளது. அவர்களை கதையை சொல்ல சொல்லிவிட்டு நான் வேறு இடத்தில் கவனம் செலுத்துவேன். அவ்விடத்தில் இருந்து வெளியேறுவேன். பயிற்சி நடைபெறும் இடத்தில் அக்கதையை கேட்பதற்கு அங்கு வேறு யாருமில்லை. ஏனென்றால் நான் மட்டுமே பயிற்சியினுள் இருக்கிறேன். நானும் எழும்பி போனவுடன் யார் அவர்களின் கதையை கேட்பது. எந்தவொரு தேவையுமின்றி சில நேரத்திற்கு பின் மீண்டும் வந்து கதையை சொல்ல சொல்வேன். அவர்கள் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து சொல்ல ஆரம்பிப்பார்கள். நான் எந்தவொரு தயவும் காட்டாது மீண்டும் வெளியேறுவேன். இவ்வாறு பல தடவைகள் அவர்களை



நான் அவர்களை விருப்பமானவர்களிடம்
னன். அவர்களின் இக்கட்டான நிலையை
மனிதர்களை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
கேட்க ஆயத்தமாக இல்லை.
முழுவதும் அவர்கள் அப்பாத்திரத்தின்
ள்வது அந்த பாத்திரத்துடனாகும்.
முழுவதையும் கேட்டேன். அவர்கள்

ரஞ்ஜித் த சில்வா
சுய உரையாடல் 01
நடிப்பின்போது
புகைப்படம் -பிரவ்ட
புவனேக்க

# உலக அகதிகள் தினம்

எங்களுக்கு கிடைத்த அனைத்து கதைகளிலும் தமது தாய் நாட்டை விட்டு வெளியேற நேரும் துன்பமான தருணங்கள் மற்றும் தமது வாழ்க்கையோடு தமக்கு அருகில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத நேரத்தில் இடம்பெற்ற துன்பமான நிகழ்வுகள் பற்றிய ஞாபகங்களே இருந்தது. நாங்கள் மேற்கொண்ட அனைத்து கற்கைகளிலும் அதன் கதைகளையும் சந்தர்ப்பங்களையும் நடிகர்களுக்கு நெருக்கமாக்க மேற்கொண்ட ஒருவகையான முயற்சி என்று சொல்லலாம். ஒவ்வொரு நாளும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களை கடைசி நாள் காட்சிக்கு முன்பு, சில நிமிடங்கள் அவர்களுக்கு மீண்டும் அவை ஞாபகம் வரும் விதத்தில் அவர்கள் அனைவருடனும் பழகுங்கள்.

அகதிகள் சிலரை மக்கள் முன்னே அழைத்துவந்து அவர்களின் கதைகளை சொல்வதற்கு சிறு நேரத்தை கொடுப்பதற்கு நாங்கள் காட்சி ஒன்றை தயார் செய்திருந்தோம். காட்சிக்கு இரண்டு மணித்தியாலயத்திற்கு முன் நடிகர்களை ஆயத்தம் செய்தோம்.

அவர்களின் தோற்றம் அகதிகள் போன்றே இருந்தது.கடைசி மணித்தியாலம். மீண்டும் நான் அவர்களுடன் பயிற்சியில் செய்தது போன்றே எந்தவொரு தயவுமின்றியே நடந்துக் கொண்டேன். அனைவரும் அவரவர்களின் பாத்திரத்துடன் அந்த உலகத்தில் இருப்பதை சில நிடமிங்களில் எனக்கு புரிந்துக்கொள்ள முடிந்தது. முதலில் தயார் செய்த, சொல்லி வைத்த முறைக்கு சென்று கதை சொல்லிவிட்டு வருவதற்கு மாத்திரமே இப்போது இருந்தது. அவர்கள் சென்று அவர்களின் கதையை,அவர்களுக்கு தேவையான நேரத்தை எடுத்து சொல்லிவிட்டு வந்தார்கள். முதலாவதாக சஞ்சீவ, அதன் பின்னர் நிரஞ்சனி கடைசியாக ஸ்டேபான். ஸ்டேபானின் கதை முடியும்வரை மற்ற இருவரும் தமது உலகத்தில் பார்வையாளர்களுக்கு தெரியும் விதத்தில் பார்த்துக்கொணடிருந்தார்கள். கதைகள் முடிந்தவுடன் கதவை திறந்து மூவரையும் வெளியே தள்ளி கதவை மூடிவிட்டு நானும் வெளியேறினேன்.சில நேரத்திற்கு பின் பல இடங்களிலிருந்தம் கரகோஷ சத்தம் எங்களுக்கு கேட்டது.

“சிரியாவை விட்டு வந்தது, எனது உடம்பிலிருந்து ஆத்மாவை வெளியில் இழுத்து போட்டது போன்று”

எனது கண் சிரியாவை நோக்கி பார்த்துக்கொண்டிருக்கும்போது,

எனது கண்ணீர் இந்த பூமி முழுவதிலும் ஓடும்போது நான் வெளியேறினேன்..

சிரியா என்பது எனது வாழ்க்கை..

எனது மூச்சு.. இனி நான் எப்படி மூச்சி விடாமல் வாழ்வது

**– உசாத்துணை : மனல் அல் புவைதானி - ஹுமா**

# இயக்குனரால் எழுதப்பட்ட குறிப்பு...

**சுய விமர்சனமொன்று**

மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நடந்த போரினால் அகதிகளாகி தமது காணிகளை இழந்தது மற்றுமின்றி அகதிகளாக முகாம்களில் துன்பத்துடன் இருக்கும் குழுக்களை அதிகளவில் காணலாம். நான் அவர்களுக்காக எதுவும் செய்ததில்லை. இவை அனைத்து பிரச்சினைகளும் மிகவும் சிக்கலான அரசியல் தேவைகளுக்கு ஏற்றவகையில் உருவாக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தமிழ் மொழி பேசும் இலங்கை இன மக்களுக்காக இந்த ஆக்கத்திற்குள் ஒரு பாத்திரத்தை தமிழ் மொழியால் முன்வைப்பதற்கு நாம் குழுவாக முயற்சி செய்தோம். இந்த நாட்டின் ஒரு பிரஜையாக அவர்களுக்காக முன் வருவதற்கு நான் இச்சந்தர்ப்பத்தை அமைத்துக்கொள்ள தீர்மானித்தேன். நான் தமிழ் மொழியில் செய்த நடிப்பை புரியாமல் இருந்த சிங்கள மொழி பேசுபவர்களில் நானும் ஒருவன். இன்னும் நாங்கள் “தமிழர்களை அனுதாபமாக பார்க்கும் சிங்கள இனத்தவர்” ஆகியதால் நான் வெட்கப்படுகிறேன். கலைஞர்களாக எங்களது கலை ஆக்கத்திற்கு மேலே சென்று நாட்டில் ஏற்பட்டுள்ள மொழி சிக்கலால் முன்னெடுக்கப்பட்டுள்ள பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு தனித்தனியாக கஷ்டப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் நம்புகிறேன். கலை உருவாக்கத்தினுள் நாம் முன்வைக்கும் கருத்துக்கள் மற்றும் அரசியல் எங்கள் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் யதார்த்தமாக உள்ளது என்பதை மீண்டும் சிந்தித்து பார்க்க வேண்டும்.

“ஒரு கலைஞர் என்ற வகையில் அகதிகளுக்காக முன்னிக்கும் ஒருவனாக தன்னை காண்பிப்பதற்கு இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாக ஆக்கிக்கொள்ள உள்மனது தூண்டிவிட்டுள்ளதை இந்நேரம் என்னால் புரிந்துக்கொள்ள முடிந்தது. நடிகர்கள் என்னால் பட்ட கஷ்ங்களுக்காக நான் அவர்களிடம் மன்னிப்பு கேட்க விரும்புகிறேன்.”

இப்படிக்கு,

ஜயம்பத்தி குருகே



சஞ்ஜீவ உபேந்திரா, மோனோலோக் 02 ஐ நிகழ்த்துகிறார், பிரவுதா புவானேகா வால் புகைப்படம் எடுக்கப்பட்டது



## சிரிய மோனோலோக்ஸ் - இலங்கை தயாரிப்பு குழு

| | |
|---|---|
| இயககம் | ஜயம்பதி குருகே, அருண் வெலந்தவே - பிரேமதிலக |
| இயக்க திட்டமிடல் | ஜயம்பதி குருகே |
| ஒப்பனை | துமிந்த அலஹேந்திர |
| சுய உரையாடல் 01 | தயாரிப்பு அருண் வெலந்தவே - பிரேமதிலக<br>ருவின் த சில்வா<br>சுபா விஜேசிரிவர்தன - ஆங்கிலம் |
| சுய உரைாடல் 02/03/04 | இயக்கம் : ஜெயம்பதி குருகே<br>சஞ்சீவ உப்பேந்திரா - சிங்களம்<br>நிரஞ்சனி சண்முகராஜா - தமிழ்<br>ஸ்டெபின் திரிமானே - ஆங்கிலம் |
| மொழிபெயர்ப்பு<br>(சிங்களம் மற்றும் தமிழ்) | நதி கம்மெல்லவீர ∴ ஙு.ளு. விஜேசிங்க∴கிருத்திகா சண்முகப்பிரயா<br>மதிஷானி திஸாநாயக்க ∴ சமிலி குணவர்தன ∴ கிங் ரத்னம் |
| முன்வைத்தல் | Stages Theatre Group in Collaboration with Mind Adventures Theatre Company |
| ஒத்துழைப்பு | ஜெர்மன் கலாச்சார மத்தியநிலையம், இலங்கை |
| ஊடக வடிவமைப்ப | வெனுர பாலசூரிய |
| வீடியோ | Luna Productions |
| புகைப்படம் | ப்ரவ்ட புவனேக்க |
| விசேட நன்றிகள் | ருவந்தி த சிக்கேரா/ ஜான் ரமேஸ் மற்றும் கோத் நிறுவன குழு<br>லசன்துனி ஜயவர்தன / மல்ஷானி தெல்கஹாபிட்டிய / பெமந்தி பிரனார்ந்து /<br>சந்தமாலி விஜேரத்ன / நில்மினி புவனேக்க |

பதிப்புரிமை ©HARAN Graph ஸ்டேஜஸ் தியேட்டர் கரன்ட்டி லிமிடெட், 2020

ஸ்டேஜஸ் தியேட்டர் குழுமத்தின் 'கலைஞர் ஆராய்ச்சி, காப்பகப்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் திட்டத்தின்" ஒரு பகுதியாக இவ் வளத்தொகுப்பு தயாரிக்கப்பட்டது.

இத் திட்டத்தின் மூலம், தொடர்ந்தும் கலைப்பயிற்சியில் ஈடுபட்டு வரும் கலைஞர்கள், ஒரு தசாப்த காலம் மதிப்புள்ள அரங்கத் தயாரிப்புகள் மற்றும் ஸ்டேஜஸ் தியேட்டர் குழுமத்தின் செயல்முறைகளை மீள்பார்வை செய்வதன் மூலம், தங்கள் சொந்த படைப்புகளை முறையாகவும், விமர்சன ரீதியாகவும் பகுப்பாய்வு செய்கின்றனர். இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததன் பின்னரான பத்து ஆண்டுகளே (2009 முதல் 2019 வரை) இத் தசாப்தமாகக் கருதப்படுகின்றது.

இது போன்ற பதினாறு வளத்தொகுப்புகள், சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வளத்தொகுப்பும், கலைஞர்களால் எழுதப்பட்டு, ஆராய்ச்சி செய்யப்பட்டு, இந்த தயாரிப்புகள் உருவாக்கப்பட்டக் காலப்பகுதியின் சமூக-அரசியல் சூழலை ஆராய்வதுடன், செயல்முறையின் போது எடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான முடிவுகளையும் பகுப்பாய்வு செய்கின்றது. இம் முயற்சியின் ஒரு பகுதியாக துணை வீடியோ உள்ளடக்கமும் உருவாக்கப்பட்டது. இவ் ஆராய்ச்சித் திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் அனைத்து தயா ரிப்புக்களையும் www.stages.lk இணையத்தில் காணலாம்.

*This project was supported by the Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) Sri Lanka.*

## வளத்தொகுப்புகள்

தொகுப்பாளர் (எழுத்துரு) ருவன்தி டி சிக்கேரா
தொகுப்பாளர் (வீடியோ): மலித் சுலார

எழுத்தாளர்கள்: ருவன்தி டி சிக்கேரா, பெமந்தி பெர்னாண்டோ, ஜயம்பதி குருகே, நதீ கம்மல்லவீர, நிபுனி 'ரதா பதிரகே, பியுமி விஜேசுந்தர

ஒழுங்கமைப்பு மற்றும் வடிவமைப்புத் தொகுப்பாளர்கள்: மல்'ானி தெல்கஹபிட்டிய, ரஜிதா பவித்ரா மதுபா'ா

பதிப்புத்திருத்தம் மற்றும் மொழி வடிவமைப்பாளர்கள்: நதீ கம்மல்லவீர (சி), நிபுனி 'ரதா பத்திரகே (சி), கிங் ரத்னம் (த), பெமந்தி பெர்னாண்டோ (ஆ), சுதே'ன ரன்முதுகல (ஆ)

ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: சஞ்சய எக்னெலிகொட, ரஜிதா பவித்ரா மதுபா'ா, வெநுர நவோத், தெ'ான் தென்னகோன்

ஆய்வு உதவியாளர்கள்: கௌ'ள்யா ஆட்டிகல, நலின் லுசேன, ரஜிதா பவித்ரா மதுபா'ா, அக்கலங்க பிரபா'வர, தினூீகா செனவிரத்ன

மொழிப்பெயர்ப்பாளர்கள்: ஜினதனி பரமேஸ்வரம் (த), 'யாமளா வேதநாயகம் (த), ஹிரண்யதா தேவாசிரி (சி.'.ஆ), அருந்தி ஜயசேகர (சி.'.ஆ), மனுலி லாவண்யா (சி.'.ஆ), லிஹினி நிலவீர (சி.'.ஆ), பியுமி விஜேசுந்தர (ஆ)

வீடியோ பதிவுக்குழு: வெநுர நவோத், கிங் ரத்னம், பிரமிளா சமரகோன், கசுன் உக்வத்த

வலைத்தள வடிவமைப்பு மற்றும் உருவாக்கம்: ரன்சக கல்மங்கொட

நிர்வாகிகள்: மல்'ானி தெல்கஹபிட்டிய, மகே' லக்மால்

## ஸ்டேஜஸ் தியேட்டர் குழு வளத்தொகுப்புகள்

**ஹுஊளு இலங்கையின் 7 தசாப்தங்கள்**
எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்கள்: நிபுனி 'ரதா பதிரகே, அக்கலங்க பிரபர்'வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்

***DCS Girls at Checkpoints***
எழுதியவர்: பியுமி விஜேசுந்தரஇ
உதவியவர்: அக்கலங்க பிரபர்'வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்

***DCS* தனி உரையாடல்கள்**
எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்: பெமந்தி பர்னான்டோ
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெ'ான் தென்னகோன்

***DCS* ருவண்டா இலங்கை ஒத்துழைப்பு**
எழுதியவர்: நிபுனி 'ரதா பத்திரகே, உதவியவர்: அக்கலங்க பிரபர்'வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

***Grease* யக்கா**
எழுதியவர்: பெமந்தி பர்னான்டோ
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெ'ான் தென்னகோன்

**கலுமாளி: பெரியவர்களுக்கான விசித்திரக்கதை**
எழுதியவர்கள்: ருவன்தி டி சிக்கேரா, நதீ கம்மல்லவீர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெ'ான் தென்னகோன

***Love and Other Objects***
எழுதியவர்: ஜயம்பதி குருகே, உதவியவர்: நலின் லுசேன
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்

***Ovaryacting***
எழுதியவர்: பியுமி விஜேசுந்தர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: வெநுர நவோத்
புகைப்படங்கள்: பிரமிளா சமரகோன்

***Passing Stage,* திட்டம்**
எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்கள்: கௌ'ள்யா ஆட்டிகல, ரஜிதா பவித்ரா மதுபா'ா
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: சஞ்சய எக்னெலிகொட, ரஜிதா பவித்ரா மதுபா'ா

**சிரியன் மொனோலோக்ஸ்**
எழுதியவர்: ஜயம்பதி குருகே, உதவியவர்: நலின் லுசேன
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: தெ'ான் தென்னகோன

***The Certificate***
எழுதியவர்: ருவன்தி டி சிக்கேரா, உதவியவர்: அக்கலங்க பிரபர்'வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: சஞ்சய எக்னெலிகொட

***Thought Curfew***
எழுதியவர்: பியுமி விஜேசுந்தர, உதவியவர்: அக்கலங்க பிரபர்'வர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: டேவிட் கொட்டரல்

**வாக்கிங் பாத்**
எழுதியவர்: ஜயம்பதி குருகே, உதவியவர்: நலின் லுசேன
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

**ஸ்டேஜஸ் கலைஞர் பயிற்சித்திட்டம்**
எழுதியவர்: நலின் லுசேன
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

***Stages Junior Ensemble***
எழுதியவர்: பியுமி விஜேசுந்தர
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பியுமி விஜேசுந்தர

***Stages Senior Ensemble***
எழுதியவர்: ஜயம்பதி குருகே
ஒழுங்கமைப்பு மற்றும் கணணி வரைபடங்கள்: பிரசாத் அழுத்வத்த

stages
theatre
group